# National Seminar on New Issue Market in the Post Liberalization Era held on 7-8, January, 2005 at Bharathidasan University, Trichy

**Organiser: Dr. M. SELVAM**

## Dailythanthi, Trichy Edition, Dated: 08.01.2005, Page No.:15



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் புதிய பங்கு வெளியீடுகள் சந்தை பற்றிய தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்ட பல்கலைக்கழக துணை வேந்தர் தங்கமுத்து "ஸ்மார்ட்" தொழில் நிர்வாக இதழை வெளியிட்டார். அதை பேராசிரியர் பார்த்தசாரதி பெற்று கொண்டபோது எடுத்த படம். அருகில் கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் செல்வம், தேசிய மூலதனச்சந்தை சென்னை கிளை மண்டல மேலாளர் சிவக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில்

### மூலதனச் சந்தையில் புதிய பங்கு வெளியீடு தேசிய அளவிலான கருத்தரங்கு

#### துணைவேந்தர் தங்கமுத்து தொடங்கி வைத்தார்

திருவெறும்பூர், ஜன.8– திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மூலதனச் சந்தையில் புதிய பங்கு வெளியீடு என்ற தேசிய அளவிலான கருத்தரங்கை துணை வேந்தர் தங்கமுத்து தொடங்கி வைத்தார்.

**கருத்தரங்கு**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் துறையின் சார்பில் "மூலதன சந்தையில் புதிய பங்கு வெளி யீடு" என்ற தலைப்பில் தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கை பாரதிதாசன் பல்கலைக்கழக துணை வேந்தர் தங்கமுத்து தொடங்கி வைத்தார். வணிகவியல் துறை தலைவர் மாணிக்கராஜ் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக தேசிய மூலதனச் சந்தை சென்னை கிளை மண்டல மேலாளர் சிவக்குமார் கலந்து கொண்டு பேசினார். முன்னதாக கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செல்வம் வரவேற்றார்.

கருத்தரங்கில் பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் தங்கமுத்து பேசியதாவது:–

தாராளமயமாக்கலின் விளைவாக மூலதனச் சந்தையின் பங்குகள் உயர்ந்து வருகின்றன. அதிக அளவில் முதலீடுகளும் நிரப்பப்பட்டுள்ளது. ஆனால் சமீபகாலத்தில் மூலதனச் சந்தையில் ஊழல், லஞ்சம், கையாடல் போன்றவை பெருகி வருகின்றன. இதனை சரி செய்ய அமைக்கப்பட்ட அமைப்புகளும் சரியான செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை. இதனால் மூலதனச் சந்தையில் பங்கு வைத்துள்ள முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனை தடுக்க வேண்டிய கட்டாயத்தில் அனைவரும் உள்ளோம்.

இதற்காக நாடு எங்கிலும் உள்ள வணிகவியல் துறை ஆசிரியர்கள், ஆராய்ச்சி யாளர்களின் கருத்துக்களை எடுத்துரைக்க நடத்தப்படும் இந்த கருத்தரங்கு தக்க சமயத்தில் நடக்கிறது.

இதன் மூலம் கொண்டுவரப்படும் கருத்துக்கள் புதிய வெளியீடு சந்தையில் மாற்றம் கொண்டு வர பெரிதும் உதவும்.

இதனை கொண்டு தவறு செய்பவர்களை கடுமையாக தண்டிக்க முடியும். மேலும் மக்களுக்கும், முதலீட்டாளர் களுக்கும் லாபத்தில் சரியான பங்கு அளிக்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக 'ஸ்மார்ட்' தொழில் நிர்வாக இதழை துணை வேந்தர் தங்கமுத்து வெளியிட, பாரதிதாசன் பல்கலைக்கழக வயது வந்தோர் துறைத்தலைவர் பார்த்த சாரதி பெற்றுக் கொண்டார்.

**120 ஆசிரியர்கள்**

இதில் தேசிய அளவிலான 120 ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி யாளர்கள், வணிகவியல் துறை மாணவ–மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை வணிகவியல் துறை பேராசிரியர் செல்வம் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## Dinamalar, Trichy Edition, Dated:08.01.2005, Page No.: 05



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் 'ஸ்மார்ட்' இதழை துணைவேந்தர் தங்கமுத்து வெளியிட, பல்கலைக்கழக கலைத்துறை தலைவர் பார்த்தசாரதி பெற்றுக்கொள்கிறார். அருகில் சோழமண்டலம் வட்டாரத்தலைவர் ரமேஷ், கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் செல்வம், தேசிய பங்கு சந்தை மேலாளர் சிவக்குமார், வணிகவியல் துறை தலைவர் மாணிக்கராஜ்.